# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
## ஒன்பதாம் பத்து
## ஆபத்துக்குதவும் நண்பனான ஸர்வேஸ்வரனாலே 'கீழ்ப்பத்தில் பெற்ற ஆத்மதர்ஶனத்தின் பலனாக நீர் என்னை அடைவது இந்த தேஹத்தின் முடிவிலே' என்று நாளிட்டுக் கொடுக்கப் பெறுதல்

### முதல் திருவாய்மொழி - கொண்டபெண்டிர்
### 'கர்மத்தால் ஏற்பட்ட உறவினரை விட்டு, இயற்கை உறவினனாய் அடியார்க்கு ஆட்படுத்தும் எம்பெருமானை பற்றுங்கள்' என்று ஆழ்வார் பிறர்க்கு உபதேசித்தல்

** கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் * சுற்றத்தவர் பிறரும் *
கண்டதோடு பட்டது அல்லால் * காதல் மற்று யாதும் இல்லை **
எண்திசையும் கீழும் மேலும் * முற்றவும் உண்ட பிரான் *
தொண்டரோமாய் உய்யல் அல்லால் * இல்லை கண்டீர் துணையே 1

துணையும் சார்வும் ஆகுவார் போல் * சுற்றத்தவர் பிறரும் *
அணைய வந்த ஆக்கம் உண்டேல் * அட்டைகள் போல் சுவைப்பர் **
கணை ஒன்றாலே ஏழ் மரமும் எய்த * எம் கார் முகிலை *
புணை என்று உய்யப் போகில் அல்லால் * இல்லை கண்டீர் பொருளே 2

பொருள் கை உண்டாய்ச் செல்லக் காணில் * போற்றி என்று ஏற்று எழுவர் *
இருள் கொள் துன்பத்து இன்மை காணில் * என்னே! என்பாரும் இல்லை **
மருள் கொள் செய்கை அசுரர் மங்க * வடமதுரைப் பிறந்தாற்கு *
அருள் கொள் ஆளாய் உய்யல் அல்லால் * இல்லை கண்டீர் அரணே 3

அரணம் ஆவர் அற்ற காலைக்கு * என்றென்று அமைக்கப்பட்டார் *
இரணம் கொண்ட தெப்பர் ஆவர் * இன்றி இட்டாலும் அஃதே **
வருணித்து என்னே? * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
சரண் என்று உய்யப் போகல் அல்லால் * இல்லை கண்டீர் சதிரே 4

சதிரம் என்று தம்மைத் தாமே * சம்மதித்து இன்மொழியார் *
மதுர போகம் துற்றவரே * வைகி மற்றொன்று உறுவர் **
அதிர் கொள் செய்கை அசுரர் மங்க * வடமதுரைப் பிறந்தாற்கு *
எதிர் கொள் ஆளாய் உய்யல் அல்லால் * இல்லை கண்டீர் இன்பமே 5

இல்லை கண்டீர் இன்பம் அந்தோ! * உள்ளது நினையாதே *
தொல்லையார்கள் எத்தனைவர் * தோன்றிக் கழிந்து ஒழிந்தார்? **
மல்லை மூதூர் * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
சொல்லி உய்யப் போகல் அல்லால் * மற்று ஒன்று இல்லை சுருக்கே 6

மற்றொன்று இல்லை சுருங்கச் சொன்னோம் * மா நிலத்து எவ்வுயிர்க்கும் *
சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும் * கண்டீர்கள் அந்தோ! **
குற்றம் அன்று எங்கள் பெற்றத் தாயன் * வடமதுரைப் பிறந்தான் *
குற்றமில் சீர் கற்று வைகல் * வாழ்தல் கண்டீர் குணமே 7

வாழ்தல் கண்டீர் குணம் இதந்தோ? * மாயவன் அடி பரவி *
போழ்து போக உள்ளகிற்கும் * புன்மை இலாதவர்க்கு **
வாழ் துணையா * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
வீழ் துணையாப் போம் இதனில் * யாதும் இல்லை மிக்கதே 8

யாதும் இல்லை மிக்கு அதனில் * என்றென்று அது கருதி *
காது செய்வான் கூதை செய்து * கடைமுறை வாழ்க்கையும் போம் **
மா துகிலின் கொடிக் கொள் மாட * வடமதுரைப் பிறந்த *
தாது சேர் தோள் கண்ணன் அல்லால் * இல்லை கண்டீர் சரணே 9

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண் * அது நிற்க வந்து *
மண்ணின் பாரம் நீக்குதற்கே * வடமதுரைப் பிறந்தான் **
திண்ணமா நும் உடைமை உண்டேல் * அவன் அடி சேர்ந்து உய்ம்மினோ *
எண்ண வேண்டா நும்மது ஆதும் * அவன் அன்றி மற்று இல்லையே 10

** ஆதும் இல்லை மற்று அவனில் * என்றதுவே துணிந்து *
தாது சேர் தோள் கண்ணனைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீது இலாத ஒண்தமிழ்கள் * இவை ஆயிரத்துள் இப்பத்தும் *
ஓத வல்ல பிராக்கள் * நம்மை ஆளுடையார்கள் பண்டே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---